1970 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அ & இ தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷன் திருவாரூரில் தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றை 8—12—1968-ல் நிறுவியுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எடுக்கப்படுகின்ற எண்ணெய்யை எதெதற்குப் பயன்படுத்துகிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் சாதாரணமாக சோப் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அதை மேலும் சுத்தம் செய்வதால், சாப்பிடுவதற்குப் பயன்படும்.

திரு. கரு. ராம. சுரியமாணிக்கம் அம்பலம்: தலைவர் அவர்களே, தவிடு முக்கியமாக கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படுகிறது. தவிட்டிலிருந்து இந்த எண்ணெய் எடுத்துவிடுவதனாலே தவிட்டிலுள்ள சத்து குறைந்துவிடுகிறது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? தவிடு கால்நடைகளுக்கு உணவாக இருப்பதாலே இந்த எண்ணெய் எடுப்பதை இந்த அரசாங்கம் கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகும்கூட, அதிலிருந்து கிடைக்கும் பிண்ணாக்கு கால்நடைகளுக்கு உணவாகவே பயன்படுத்தப்படுகிறது.

Loan floated by Tamil Nadu Housing Board.

* 28. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Housing Board resolved to float a loan of the nominal value of Rs. 200 lakhs; and

(*b*) if so, how this loan would be utilised?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இந்தப்பணம் கீழ்க்கண்ட திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

(1) குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(2) நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(3) 500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி மேம்படுத்தவும் பயன்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, was this loan fully subscribed and was the work regarding the construction of cheap houses for the poor people taken up and if so, in which part of the City of Madras?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, ஜனவரி மாதத்திலே 200 லட்சம் ரூபாய்க்கான கடன் எழுப்பப் பட்டு, 200 லட்சம் ரூபாய் சேர்ந்துவிட்ட காரணத்தாலே, மேற் கொண்டு பணம் வசூல் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நிதியைத் தமிழ்நாடு முழுவதிலும் இந்தத் திட்டத்திலே பயன் படுத்தி வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. எங்கெங்கு தேவைப் படுகிறதோ, அங்கெல்லாம் வீடுகள் கட்டப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, வினா எண் 30 ஆகியவை ஒற்றிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நிலப்பறிப் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. க. கோமதி சங்கர தீட்சிதர், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. என். சங்கரய்யா, திரு. கே. விநயகம், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. என். வரதராஜன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. சோ. அழகர்சாமி ஆகிய எட்டு உறுப்பினர்கள், அண்மையில் நடந்த நிலப்பறிப் போராட்டத்தைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று 'ஒற்றிவைப்புத் தீர்மானம்' கொடுத்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி, பேரவையை ஒற்றிவைத்து விவாதிக்க எந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குவதற்காக, கட்சிக்கு ஒருவர் என்ற அளவில் விளக்கிவிடுவது நல்லது. முதலில் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடக்கவிருந்த நிலப்பறிப் போராட்டத்தைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் நடவடிக்கைகளை ஏன் ஒற்றிவைக்க வேண்டுமென்பது குறித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும் புகிறேன். இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து எடுத்துக்கூற விரும்புகிறேன். இன்று இருக்கிற அரசியல் சூழ்நிலையிலே இந்த நிலப்பறி இயக்கம் போராட்டமாகவே இந்திய உபகண்டத்திலே முழுமையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் இது வலுப்பெற அரசியல் கட்சிகள் முனைந்து அதற்குத் திட்டமும் தீட்டி, செயல்படுத்துவதற்குமுன்னர் அர சாங்கமும் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றி இப்போது விவாதிப்பதற்கு நான் விரும்பவில்லை. நாட்டிலே இதனால் ஒருவித